## கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு

# பருவமழையை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பேட்டி!



கடலூர், டிச.1 –

கடலூர் மாவட்டம் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள அரசு நிர்வாகம் தயார்நிலையில் உள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.

வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (சர்க்கரைத் துறை) அன்பழகன் மாவட்ட ஆட்சித்தலைவர். சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்ட மன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்புப் பணிகள் குறித்து கடலூர் சுற்றுலா மாளிகையில் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (29.11.2025) நடைபெற்றது

வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் அரசு உயர்அலுவலர்களுக்கு அனைத்து விதமான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை உள்ளாட்சி பிரதிநிதிகளை யும் களத்திலிருந்து தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்ள உத்தர விட்டுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் பருவமழை தொடங்குவதற்கு முன்பாகவே தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தியன்பேரில் கடலூர் மாவட்டத்தில் 22 இடங்கள் மிக அதிகமாக பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 39 இடங்கள் அதிகம் பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 20 இடங்கள் மிதமாக பாதிப்புக்குள்ளாக கூடிய இடங்களாகவும், 158 இடங்கள் குறைவான அளவு பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களாகவும் என 239 இடங்கள் கண்டறியப்பட்டு, அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அடிப்படை வசதிகள் தயார் நிலை!**

கனமழை ஏற்படும்பொழுது பொதுமக்களை பாதுகாப்பாக 28 புயல் பாதுகாப்பு மையங்களில் 8400 நபர்களும், 14 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களில் 15,800 நபர்களும், 191 தற்காலிக தங்கும் இடங்களில் 1,54,875 நபர்களும் தங்கவைக்கும் அளவிற்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன் தயார் நிலையில் உள்ளது.

பேரிடர் ஏற்படும் பொழுது அப்பகுதிகளில் போக்குவரத்து வசதிகளை சரிசெய்திடவும், மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும் JCB, பொக்லைன் இயந்திரங்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள் மற்றும் தற்காலிக மின்சார தேவைக்காக ஜெனரேட்டர்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும் மணல் மூட்டைகளும், சவுக்கு கட்டைகளும், ரப்பர் படகுகளும், 8,300 மின் கம்பங்களும், 164 கி.மீ மின் கடத்திகளும், 128 மின்மாற்றிகளும் தயார் நிலையில் உள்ளன. மீட்புப் பணிகளில் ஈடுபட தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் 35 நபர்கள், தமிழ்நாடு பேரிடர் மீட்புக்குழுவினர் 45 நபர்கள் மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் 60 நபர்களும் வருகைபுரிந்துள்ளனர்.

அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் மின்சாரம் தடையின்றி வழங்கும் வகையில் ஜெனரேட்டர் வசதிகள், 24 மணிநேரமும் சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில் மருத்துவர்கள் சுழற்சி முறையில் ஈடுபட உள்ளனர். போதிய மருந்து வசதிகளும் இருப்பு உள்ளது. குறிப்பாக அடுத்த ஒரு வாரகாலத்தில் பிரசவம் மேற்கொள்ள 925 கர்ப்பிணிகள் உள்ளனர். அவர்களுக்கு மழையின் போது மகப்பேறு சிகிச்சை மேற்கொள்வதற்கான வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மழைநீர் வடிய ஏதுவாக நீர்வளத்துறை மூலம் சிறிய மற்றும் பெரிய நீர் ஆதார அமைப்புகள் தூர்வாரப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு அவர்களையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மழைநீரினால் சூழப்பட்ட விளைநிலங்களில் உள்ள தண்ணீரினை உடனுக்குடன் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு காப்பீடு!**

விவசாயிகள் அனைவரும் தங்கள் நிலங்களுக்கு காப்பீடு செய்ய 15.11.2025 வரை அனுமதிக்கப்பட்டிருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது காப்பீடு செய்ய 01.12.2025 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. மாநில அளவில் கடந்த ஆண்டு சம்பா பருவத்திற்கு சுமார் 18.05 இலட்சம் ஏக்கர் பரப்பில் 8,06,494 விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்கு காப்பீடு செய்துள்ளனர். இந்த ஆண்டு இதுவரை சுமார் 20.69 இலட்சம் ஏக்கர் பரப்பிலான விளைநிலங்களுக்கு 8,61,629 விவசாயிகள் காப்பீடு செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட இந்தாண்டு கூடுதல் நிலங்களுக்கு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. குத்தகைதாரர் விவசாயி களும் காப்பீடு செய்யலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யூரியா, பொட்டாஷ், டிஏபி, காம்ப்ளக்ஸ் உள்ளிட்ட உரங்கள் தேவையான அளவு கையிருப்பு உள்ளது. கலப்பட உரம் விற்பவர்கள் கண்டறியப்பட்டு சட்டரீதியாக வழக்குப்பதியப்பட்டு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது. கடலூர் மாவட்டம் பெண்ணையாறு, கெடிலம். வெள்ளாறு, பரவனாறு, கொள்ளிடம் ஆகிய 5 பெரிய ஆறுகள் கடலில் கலக்கும் வடிகால் பகுதியாக உள்ளதால் மாவட்டத்தில் தாழ்வானப் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் படிப்படியாக பல்வேறு நிரந்தர கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

குறிப்பாக ரூ.81.12 கோடி மதிப்பீட்டில் அருவாள்மூக்கு ஒழுங்கியம் கட்டுதல் மற்றும் வெள்ளநீர் வடிகால் கால்வாய் அமைக்கும் பணி போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. கனமழை ஏற்படும்பொழுது பரவனாற்றில் என்.எல்.சி மூலம் வெளியேற்றப்படும் சுரங்கநீரின் அளவை மாவட்ட நிருவாகத்திடம் உரிய அனுமதிபெற்று வெளியேற்றிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார் மாவட்ட வருவாய் அலுவலர் கோ.புண்ணிய கோட்டி, கடலூர் வருவாய் கோட்டாட்சியர் சுந்தர ராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டம் கோட்டூர் மற்றும் முத்துப்பேட்டை ஒன்றியப்பகுதிகளில் மழை வெள்ளம் பாதித்த விவசாய நிலங்களை தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா , மாவட்ட செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. , தாட்கோ தலைவர் நா.இளையராஜா ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆறுதல் கூறியதோடு மேல்நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளிடம் ஆலோசனை கூறினர்.மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனசந்திரன் , மாரிமுத்து எம்.எல்.ஏ. மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் அழகு.ராஜா ஒன்றிய செயலாளர்கள் பால.ஞானவேல்,இரா.மனோகரன்,கே.வி.கே.ஆனந்த், மாவட்ட விவசாய தொழிலாலர் அணி அமைப்பாளர் க. அன்பழகன்,பொறியாளர் அணி அமைப்பாளர் பிரபாகரன் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

## சேலம் மாவட்டத்தில் “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம்களில்

# 24,219 நபர்களுக்கு பல்வேறு பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சேலம், டிச. 1 –

ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் ”நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் ஆய்வு மேற்கொண்டு தகவல்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் நேற்று முன்தினம் (29.11.2025) நடைபெற்று வரும் ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை யில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக்குப்பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சியின் வாயிலாக ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து அன்றையதினம் சேலம் மாநகராட்சி, மணக்காடு, காமராஜர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ”நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமானது தொடங்கி வைக்கப்பட்டது.

குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இதுவரை நடத்தப்பட்ட 16 மருத்துவ முகாம்களில் 10,372 ஆண்களும், 13,847 பெண்களும் என மொத்தம் 24,219 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்று உள்ளனர். இதில் 19,208 நபர்களுக்கு இரத்தப் பரிசோதனையும், 16,706 நபர்களுக்கு இசிஜி பரிசோதனையும், 2,408 நபர்களுக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் பரிசோதனை, 2,606 நபர்களுக்கு எக்கோ பரிசோதனையும் மற்றும் 1,953 நபர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் 29.11.2025 இச்சிறப்பு மருத்துவ முகாமானது ஓமலூர் வட்டாரம், வேலாசாமி செட்டியார் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்படுகிறது. நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பரிசோதனைகள் அனைத்தும் இலவசமாக செய்யப்படுகிறது.

மேலும், இம்மருத்துவ முகாமில் பொது மருத்துவம், இருதய மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம் மற்றும் மகப்பேறு மருத்துவம் உட்பட 17 வகையான சிறப்பு மருத்துவ துறைகள் சார்ந்த சிறப்பு மருத்துவ நிபுணர்கள் கொண்டு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, சிறப்பு மருத்துவ முகாமில் கலந்து கொண்ட 12 மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டைகளை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இளையவரின் பிறந்தநாள்; ஊர் போற்றும் பெருநாள்!



இனியவரே,
இளையவரே,
தமிழகத்தின்
துணை முதல்வரே,
தரணி போற்றும் தலைவரே,
தலைமைக்கு சிறந்தவரே,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

பெருங்காற்றும்
பெருமழையும்
வரும்முன்பு
வந்து நின்றாய்,
பெய்த மழை
காணமல் போனது,
பெருங்காற்றும் அடங்கிப்போனது,
தற்குறி காளான்களும்
தரைமட்டமானது,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

திட்டங்களை பார்க்கின்றாய்,
திட்டமிட்டு பார்க்கின்றாய்,
அடுக்கடுக்காய் ஆய்வுக்
கூட்டங்கள்
அறிவாய்
நடத்துகின்றாய்,
அரசு அலுவலர்களை
அரவணைத்(தாய்)
பணிகள் விரைந்து முடித்து,
மடிப்புகை மைனாரிட்டி
தலைவர்களை திணறவைத்தாய்,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

சமத்துவம் பேசுகிறாய்,
சனாதனமும் பேசுகிறாய்,
ஆரியத்தை அர்ச்சனை
செய்கின்றாய்,
திராவிடத்தை தீட்டி
வருகின்றாய்,
ஒன்றியம் எதிர்ப்பு பேசுகிறாய்,
இளைஞர் அணியை
இறுகணைக்கின்றாய்,

இலக்கணம் பேசுகிறாய்,
அரசியல் கூட்டங்களில்
எதிரணியை
இடித்தும் பேசுகிறாய்,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,

உன் சனாதானம்
பெரியாரைப் போற்றுகின்றது,
பேராற்றல்
தலைவரை நினைவூட்டுகிறது,
துணிவு
தளபதியை முன்நிறுத்துகின்றது,

விளையாட்டுத் துறையில்
விளையாட்டு திடல் பெருகியது,
தங்கங்கள் குவிகிறது,
உனக்கு பிறந்தநாள்
ஊர் போற்றும் பெருநாள்,



**த.சௌந்தர்**
திருமுல்லைவாயில்




புதுக்கோட்டை வடக்கு மாவட்ட. தி.மு.க.சார்பில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கரம்பக்குடி பேரூர் கழக செயலாளர் உ.முருகேசன்,வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முத்துகிருஷ்ணன் கழக மூத்த முன்னோடிகள் கழக நிர்வாகிகள் அனைவரும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

